**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**Crl.M.P. No. 244 /2025**

**Dated : 20.06.2025**

பெயர் :– பார்வதி

க/பெ. :– அன்பழகன்

வயது :– 56/2025

**சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது**.

நான் நரசிங்கநத்தம் மேலத்தெருவில் வசித்து வருகிறேன். எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் ராஜேந்திரனும் அசோகனும் அவர்களது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார்கள். எங்கள் குடும்பத்திற்கும் எதிரி ராஜேந்திரன் குடும்பத்திற்கும் இடையே வேலி வைப்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. இந்நிலையில் கடந்த 29.01.2024 அன்று காலை 08.00 மணியளவில் ராஜேந்திரன் என்பவர் எனது வீட்டு வாசலில் வந்து என்னை குச்சிகாரி, தேவடியா வெளியே வாடி, நீ இருப்பதால் தான் எனக்கு இடஞ்சலாக உள்ளது என திட்டிகொண்டிருந்தார். அப்போது அவரது தம்பி அசோகன் அங்கு வந்து எனது கன்னததில் அறைந்தார். நான் பேசிக்கொண்டு தானே இருக்கிறேன் எதற்காக என்னை அடிக்கிறீர்கள் என கேட்டதற்கு ராஜேந்திரன் எனது அடிவயிற்றில் உதைத்தார். நான் கீழே விழுந்துவிட்டார். நான் அலறும் சத்தம் கேட்டவுடன் வீட்டில் துாங்கிகொண்டிருந்த எனது மகன் வந்து கேட்டார். அப்போது எதிரிகள் இருவரும் எனது மகனை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். இது குறித்து நான் பெரம்பூர் காவல் நிலையம் சென்று 3 முறை புகார் கொடுத்துள்ளேன். ஆனால், அவர்கள் எனது புகாரின் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், காவல் துறை இயக்குநர், சென்னை, காவல் துறை துணைத்தலைவர் தஞ்சாவூர், மயிலாடுதுறை மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோருக்கு புகார் அனுப்பினேன். அவர்கள் அந்த புகாரை பெற்றுகொண்ட பிறகும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, நான் இந்நீதிமன்றத்தில் இந்த புகாரை தாக்கல் செய்துள்ளேன்.

நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் காவல் துறை உயர்அதிகாரிகளுக்கும் அனுப்பிய புகாரின் அலுவலக நகல் **மசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பெரம்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் **மசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது புகாரின் மீது நடவடிக்கை எடுத்து எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.